# முரசொலி

பக்கங்கள் நான்கு    விலை ரூபா; 5-00

மலர் 06 ஒலி 229 ஆங்கீரச ஆடி 07 (22 07 1992) புதன்


## இழப்புகளை ஈடுசெய்ய இராணுவத்திற்கு ஆள்திரட்டு

இராணுவத்துக்கு மேலும் ஆள் திரட்டும் பணியில் இராணுவத் தலைமைப்பீடம் ஈடுபட ஆரம்பித்துள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் 3 நாட்களுக்கு முன்தினத்திலிருந்து ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிகிறது. அதிகளவுசிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு அடிப்படைக் கல்வித் தகைமை எட்டாம் வகுப்பு வரை படித்திருந்தாலேபோதும் என்றவாறு குறைக்கப்பட்டுள்ளதெனவும் கூறப்படுகிறது எனினும் இராணுவத்தின் பலத்தை அதிகரிப்பதற்காக எத்தனை பேர் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்ற தகவல்களை இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை. புலிகளின் தாக்குதல்களால் இராணுவம் போரணிகள் பாரிய இழப்புகளைச் சந்தித்த — 4 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு படை முகாமிற்கான விநியோக முயற்சியே பலவேகய - 2

## மாரிகாலத்திற்குமுன் பாதை திறக்கும் அவசரம் படையினருக்கு ஏற்பட்டது

யாழ். குடாநாட்டிற்கான தரைப்போக்கு வரத்தை துண்டிக்கும் அதே சமயம் ஆனையிறவு இராணுவ முகாமிற்கான அத்தியாவசிய பொருள்களை மாரிகாலத்திற்கு முன்னதாக கொண்டு சென்று சேர்ப்பதற்காகவே அண்மையில் ஒபரேஷன் பலவேகய 2 எனும் நீண்ட தொடர் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாரி காலத்தில் வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரையிலான 8 கிலோமீற்றர் பாதையின் பல பகுதி வெள்ளத்தில் மூழ்கிவிடும். இந்நிலையில் முகாமிற்கான உணவு மற்றும் வெடிமருந்துகளை பெருந் தொகையாக விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

ஹெலிகொப்டர்கள் மூலமும் பெருமளவில் பொருள்களை முகாமிற்கு வழங்குவதில் சிரமங்கள் தோன்றலாம் இந்நிலையில் மாரிகாலத்திற்கு முன்பாக இராணுவ முகாமுடனான பாதை நீர்க் மூலம் முன்பாக விநியோகப் பாதை இராணுவத்திற்கு அவசரமாக தேவைப்பட்டது.

இதன் காரணமாக ஒரு விநியோகப் பாதையை திறக்க இராணுவ நடவடிக்கைஒன்றும் குறிப்பிட்ட நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

இதே சமயம் மாரிகாலம் வரையிலான இந்த விநியோகப் பாதை புலிகளின் திடீர் தாக்குதலுக்கு உள்ளாகாமல் தடுப்பதற்கு விநியோகப் பாதையின் இருபுறமாக வடக்காகவும் தெற்காகவும் ஒரு முன்னணி பாதுகாப்பு = 4 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் அமரதுங்க வெற்றிலைக்கேணி விஜயம்

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் வடபகுதிக்கு விஜயம் செய்தார்.

தனது விஜயத்தின் போது அமைச்சர் வெற்றிலைக் கேணிக்கும் சென்றதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அங்கு அவர் பலவேகய நடவடிக்கைக்கு பொறுப்பான டென்சில் கொப்பேகடுவையையும் சந்தித்து பேசினார். தீவுப்பகுதிக்கு அமைச்சர் விஜயம் செய்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## உலர் உணவு வழங்கக்கோரி செயலகத்தில் மக்கள் மறியல்

தீவக பகுதி மக்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச உலர் உணவை மீண்டும் தமக்கு வழங்குமாறு கோரி தீவக மக்கள் நேற்று காலை 10 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை யாழ் செயலகத்துக்கு முன்னால் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான தீவக மக்கள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

தமக்கு உடனடியாக இலவச உலர் உணவு வழங்கக் — 4 ஆம் பக்கம் பார்க்க

## ★ யாழ். செயலகம் உடனடி தீர்மானம் தீவக மக்களுக்கு மீண்டும் இலவச உலர் உணவு

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு மீண்டும் நேற்று முதல் இலவச உலர் உணவு வழங்கப்படும் என யாழ். செயலக புனர்வாழ்வு பகுதி அறிவித்துள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்ட தீவக நலன்காக்கும் பிரிவு தலைவர் மற்றும் வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை பல, நோ. கூ. சங்க பிரதிநிதிகள் யாழ். செயலகத்தினுள் அமைச்சு

## படையினர் கலிபர் தாக்கு

நேற்று முன்தினமிரவு மண்டைதீவுப் படையினர் யாழ் நகர் கரையோரப் பகுதியை நோக்கி 50 கலிபர்த்தாக்குதலை சரமாரியாக மேற் கொண்டிருந்தனர்,

இரவு 11 மணிதொடக்கம் 12 மணிவரையுள்ள இடைப்பட்ட நேரத்தில் கரையோரப் பகுதியை நோக்கியே படையினர் நீண்ட நேரமாக துப்பாக்கிப் பிரயோக தாக்குதலை மேற் கொண்டனர்.

நேற்று மாலையும் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். 50, 07

## காரைநகரிலும் துப்பாக்கிச்சூடு

நேற்று அதிகாலை 6 மணியளவில் காரைநகர் கடற்பிரதேசத்திலிருந்து கடற்படையினர் பொன்னாலை திருவடி நிலை கரைப் பகுதிகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தியதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர் 50, 07

## இனந்தெரியாத சடலம் அடக்கம் செய்யப்பட்டது

கடந்த புதன்கிழமை யாழ் கடலேரிப் பகுதியில் மிதந்து வந்த 45 வயது மதிக்கத்தக்கவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்படாத நிலையில் யாழ் வைத்தியசாலையினரால் அடக்கம் செய்யப்பட்டது.

இச் சடலம் யாழ் குடாப் பகுதியைச் சேர்ந்தவரில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சடலம் ஒரு வாரமாக யாழ் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இச்சடலம் இந்திய மீனவருடைய சடலமாகவே இருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. படையினரின் துப்பாக்கிச் சூடு தலையில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. 07

## மண்டைதீவு முகாமிலிருந்து கரையோரம் நோக்கி ஷெல்

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலை 7-30 மணியளவில் யாழ்கரையோர பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்ட

இவை கடற்கரையோர பகுதிகளில் வீழ்ந்து வெடித்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இந்த ஷெல் தாக்குதலின் அச்சத்தினால்

## ★ வலி வடக்கு பகுதியில் வீட்டுத் தளபாடங்கள் படையினரால் திருட்டு

வலிவடக்குப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பகுதிகளில் இருந்த வீடுகளில் இருந்து வீட்டுப் பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் இராணுவம் வாபஸான இடங்களுக்கு மக்கள் சென்று பார்த்தபோது இது அறியப்பட்டுள்ளது (ரீ. வி., சோபாக்கள், கட்டில்கள் போன்ற பொருள்கள் இவ்வாறு ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 22

## கரையோரம் நோக்கி ஷெல்

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலை 7-30 மணியளவில் யாழ்க்கரையோர பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவை கடற்கரையோர பகுதிகளில் வீழ்ந்து வெடித்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இந்த ஷெல் தாக்குதலின் அச்சத்தினால்

— 04ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவு கடலில் பீரங்கிப்படகு நடமாட்டம்

மண்டைதீவு கடற்பகுதியில் பீரங்கி படகுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஒருவார காலமாக இப்படகுகள் இந்த கடற்பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீது படையினர் கலியர் தாக்குதல் மேற்கொள்வதாகவும் நேற்று அதிகாலை ஒருமணியளவில் பீரங்கிபொருத்திய கடற்படைப்படகுகளில் இருந்து கடற்படையினர் யாழ் கரையோர பகுதிகளை நோக்கி பீரங்கி தாக்குதலை மேற்கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47

கலியாக்குப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த பகுதிகளில் இருந்த வீடுகளில் இருந்து வீட்டுப் பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் இராணுவம் வாபஸான இடங்களுக்கு மக்கள் சென்று பார்த்த போது இது அறியப்பட்டுள்ளது (ரீ.வி., சோபாக்கள், கட்டில்கள் போன்ற பொருள்கள் இவ்வாறு அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 22

● ஜனவரி - மார்ச் 1992

## பாதுகாப்பு வரியாக 27.2கோடி அரசாங்கம் அறவீடு

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் பாதுகாப்பு வரியாக இருபத்தேழு கோடி இருபத்தொரு லட்சம் ரூபாவை அரசாங்கம் அறவிட்டுள்ளது.

1992 ஜனவரி முதலாம் திகதி முதல் ஒருசதவீதமாக நிர்ணயிக்கப்பட்ட இந்த வரி 1992 மே முதலாம் திகதி முதல் மூன்று வீதமாக உயர்த்தப்பட்டது.

இதன் மூலம் 1992 மே முதல் டிசம்பர் மாதம் வரை மாதாந்தம் முப்பத்தெட்டுக் கோடி நாற்பது லட்சம் வீதமாக முந்நூற்று அறுபது

— 4 ஆம் பக்கம் பார்க்க

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு மீண்டும் நேற்று முதல் இலவச உலர் உணவு வழங்கப்படும் என யாழ். செயலக புனர்வாழ்வு பகுதி அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக நேற்று யாழ் செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்ட மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட தீவக நலன்காக்கும் பிரிவு தலைவர் மற்றும் வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை பல,நோ.கூ. சங்க பிரதிநிதிகள் யாழ். செயலகத்தினுள் அழைத்து வரப்பட்டனர்.

அங்கு நடைபெற்ற கலந்து

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சவர்க்காரங்கள் நியாய விலையில் விற்பனை

கிளிநொச்சியில் தேங்கிக்கிடந்த பொருள்கள் தற்போது குடாநாட்டிற்கு வந்து கொண்டிருப்பதனால் சவர்க்காரம் வேண்டியளவு சாவகச்சேரி, கொடிகாமச் சந்தையில் நியாயவிலையில் மக்கள் வாங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

நேற்று மாலை யாழ். நகரில் ஒரு சில வியாபாரிகள் சவர்க்காரங்களை நியாய விலையில் விற்பனை செய்தனர். 07, 47

ஏற்கனவே அங்கு அனுப்பி னர்.

## 3 முஸ்லிம்கள் அம்பாறையில தெரிவாகவேண்டும்

-மன்சூர்

அம்பாறை மாவட்டத்திலிருந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்று முஸ்லிம்கள் தெரிவு செய்யப்படவேண்டுமெனவும், அவ்வாறு மூன்று முஸ்லிம்கள் இங்கிருந்து தெரிவு செய்யப்பட்டாலேயே அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேண முடியுமெனவும் வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஏ ஆர் எம், மன்சூர் பொத்துவிலில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இனரீதியில் செயற்பட்டு, கடந்த பொதுத் தேர்தலில் கூடுதலான முஸ்லிம் உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப முஸ்லிம் சமூகம் தவறிவிட்டது என்பதையும் நன்கு உணர வேண்டுமென்றும் அவர் அங்கு கூறினார்.

## மாதர்களுக்கென தனியான சேமிப்புத் திட்டம்

இலங்கை வங்கி மாதர்களுக்கென புது மாதிரியான சேமிப்புத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டே இலங்கை வங்கி மாதர்களுக்கென இந்த தனியான சேமிப்புத்திட்டத்தை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது.

## 32 தென்பகுதி மீனவர்கள் கடலில் காணாமற் போயினர்

தென்பகுதிக் கரையிலிருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற 32 மீனவர்கள் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் 8 படகுகளில் கடலுக்குச் சென்றிருந்தனர்.

இந்த மீனவர்களைத் தேடும் முயற்சியில் கடற்படையினரும், விமானப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

22 7 91 அன்று ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்துடன் புல்லாவெளியில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டார்

மன்னார் மண்ணில் பிறந்த நீ
சிறிய வயதினிலேயே எம்
தாய் மண் பற்றி சிந்தித்தாய்
புலியென வீறுகொண்டு எழுந்தாய்
பல களங்களிலே எதிரிகளை வீழ்த்திய நீ
ஆனையிறவுச் சமரினிலே
சாதனைகள் படைத்து விட்டு
வரலாற்றில் இடம் பிடித்தாய்

இதே தினத்தில் வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

தம்பிப்பிள்ளை அந்தோனிதாஸ் குடும்பத்தினர்.
மன்னார்
07054

## தாக்குதல் தொடர்கிறது

பருத்தித்துறைக் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் மீது கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

இப்பகுதியில் இரவு வேளைகளில் கடற்படையினர் ரோந்து சுற்றி வருவதனால் இரவு நேரங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதில்லை. காலை நேரங்களில் கரையிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலேயே இவர்கள் மீன் பிடித்து வருகிறார்கள். இவர்களைக் கண்டதும் கடற்படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து வருவது சாதாரண நிகழ்ச்சியாக உள்ளது.

கடந்த சனிக்கிழமை பெசலிண்டிப் படகில் ரேலர் வலை மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை கடற்படை துரத்தி வந்து சுட்டது. அச்சமயம் காங்கேசன்துறையிலிருந்து பொருள்களை இறக்குவதற்காக மெரினாஸ் கப்பல் பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (12)

பரீட்சைகள் மார்ச் 16 ஆம் திகதி ... தெரிவித்தனர்.

## தென்மராட்சிப் பகுதிகளில் விதை நிலக்கடலை உற்பத்தி

விதை நிலக்கடலை உற்பத்திக்காக தென்மராட்சிப் பகுதியில் நுணாவிலில் நிலக்கடலை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1992/93 பெரும் போகத்தில் கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளில் நிலக்கடலை செய்கையை விஸ்தரிக்கும் நோக்கத்தின் கீழ் யாழ் மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் இவ்விதை நிலக்கடலை உற்பத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2,500 கிலோ விதை நிலக்கடலை அறுவடையாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முஸ்லிம்களின் கருத்துக்கள் அறியப்படவில்லை என முஸ்லிம் சமய இராஜாங்க அமைச்சர் அஸ்வர் கூறியுள்ளார்.

மாட்டோம். முஸ்லிம்களை உதைபந்தாகக் கருதி உதைக்கவும் அனுமதிக்க மாட்டோம் என அஸ்வர் மேலும் தெரிவித்தார்.

## இணைப்பை எதிர்ப்பதென முஸ்லிம் மகாநாட்டில் முடிவு

வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பதென அகில இலங்கை முஸ்லிம் மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமையன்று கொழும்பில் இந்த மகாநாடு நடைபெற்றது.

அம்பாறைக்கு தனி முஸ்லிம் மாகாண அமைப்பொன்று தேவையென்ற கருத்தும் முஸ்லிம் சமூகத்தின் ஒரு சாராரால் வலியுறுத்தப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ் / நாயன்மார்கட்டு
ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள்
கொடியேற்றம்

## அடியார் வாழ்வு தரும்
## அருள் விழா

இராகம்:- பாஹேஸ்வரி　　தாளம்:- ஆதி

பல்லவி

ஆடி மாசமொரு விழா அன்னைக்போர் பெருவிழா
நாடிவருமடியார் நல்வாழ்வு தரும் அருள் விழா
(ஆடிமாச)

அநுபல்லவி

வாடியுனைத் தேடிவரும் வஞ்சியர்கள் வாழ்வில் இன்பம்
கூடிவரப் பெற்றிடவே கொடியேற்றத் திருவிழா
(ஆடிமாச)

சரணம்

ஆர்த்தெழுந் தன்னையருட் பவனிவரும் கொடியேற்றம்
ஏத்துமடியார் வாழ்வு என்றும் பெறும் முன்னேற்றம்
கூத்தனிடப்பாக மகைக் கொண்டவளின் திருப்பார்வை
பார்த்து மகிழ்ந்தவர் பெறுவர் பார்வதியின்
அருட்பார்வை
(ஆடிமாச)

இ. குகதாசன்
நாயன்மார்கட்டு

## ஈராக் மீது சிறிய அளவில் விமானதாக்கு நடைபெறும்

ஈராக் மீது இன்னும் பத்து தினங்களுக்குள் சிறிய அளவிலான நேசநாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல் நடைபெறலாம் ஐ. நா. பாதுகாப்புச் சபை அதிகாரி ஒருவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஈராக்கில் உள்ள அணு உற்பத்தி நிலையங்களை பார்வையிட ஐ. நா. அதிகாரிகளுக்கு ஈராக் தொடர்ந்து அனுமதி மறுத்துவருகிறது இது வளைகுடா யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

ஈராக்கில் உள்ள விவசாயத் துறை அமைச்சின் கட்டடத்தை பார்வையிட ஐ. நா. அதிகாரிகளுக்கு ஈராக் அனுமதி வழங்க கடந்த ஒருவாரமாக மறுத்து வருவது தெரிந்ததே.

விவசாயத்துறை கட்டடத்தில் அணு ஆயுத உற்பத்தி ஆவணங்கள் இருப்பதற்கு நியாயம் இல்லை என ஈராக் வாதிட்டு வருகிறது.

இதனிடையே ஐ. நாவின் போக்கை கண்டித்து ஈராக் இயமக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

## தெ. ஆபிரிக்கா ஒலிம்பிக் குழு சாம் ராமசாமி தலைமையில்

இம் முறை ஸ்பெயினில் நடைபெறும் ஒலிம்பிக்போட்டியில் நீண்ட கால சர்வதேச தடையின்பின் தென்னாபிரிக்க அணி வந்து சேர்கிறது.

தென்னாபிரிக்க அணிக்கு சாம் ராமசாமி எனும் தமிழர் தலைமை தாங்கிச் செல்கிறார் தென்னாபிரிக்க அணியில் 97 வீரர்கள் இடம் பெறுகின்றனர் கறுப்பர்கள் மற்றும் கலப்பினத்தவர்கள் என இவர்களில் 14 பேர் உள்ளனர்,

## ● வெளியீட்டு விழாவில் வாஞ்சி
## தேசம் விடுதலை அடையும்போது 'நெருப்பு மழை' ஓயும்

"எப்போது இத்தலைவர் தேசம் வெளியீட்டு விழாவில் இக்கவிதைகள் எல்லாம் வெறு … ஓயும் என அவர் தமதுரையில் மேலும் தெரிவித்தார்.

யாழ் இந்து கல்லூரியில் …

## கொள்வனவுக்கு பணிப்பு

யாழ் பல்கலைக்கழக நூல்கள் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளியீடு செய்யப்படும் நூல்களை வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் பொதுசன நூலகங்களுக்கும் கொள்வனவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

## அண்ணா கழகம் சாம்பியன்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டியில் அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது　18

ஆனையிறவு...

நிலையையும் ஏற்படுத்த வேண்டிய ஏற்பட்டது.

இதுவே வடக்கை இயக்கச்சி மற்றும் தெற்காக நிதிய வெட்டை பக்கமாகவும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கு காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது

மண்டைதீவு...

குருநகர் நாவாந்துறை கொட்டடி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து யாழ் நகர பாதுகாப்பு வலய பிரதேசத்துக்கு வந்ததாகவும் நிலைமை வழமைக்கு திரும்பியதும் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது　47.07

தீவக...

மரயாடலில் யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் மாவட்ட பிரதி ஆணையாளர் த. லைத்திலிங்கம் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ம. இரேனியஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த பல. நோ. கூ. சங்கங்கள் நேற்று பிற்பகல் 2 மணியில் இருந்து உடனடியாக இலவச உலர்உணவு பொருட்களை மக்களுக்கு விநியோகிக்க வேண்டும் எனவும் மிகுதியான பெயர்ப்பட்டியல் உடனடியாக யாழ் செயலகத்தால் வழங்கப்படும் எனவும் "இ" உணவு அட்டைகள் இம்மாத இறுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் இந்த பிரதிநிதிகளுக்கு எடுத்து கூறினார்.

பொருட்களை மக்களுக்கு உடனடியாக வழங்கமுடியாத …

# பொலநறுவை ரயில் மறிக்கப்பட்டு 7 பேர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பிலிருந்து பொலநறுவைக்கு சென்று கொண்டிருந்த ரயிலை வழிமறித்த இனந்தெரியாத ஆயுத கோஷ்டி அதில் பயணம் செய்த 7 முஸ்லிம்களை சுட்டுக் கொன்றது இதில் 6 பேர் காயமடைந்தனர்

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது ரயிலை சித்தாண்டிப்பகுதியில் சிவப்புக் கொடியை அசைத்து நிறுத்திய கோஷ்டியினர் அதில் பயணம் செய்த சில பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து சித்தாண்டி, இராசன் இராணுவ முகாம்களிலிருந்து இராணுவம் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டதாகவும், 6 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் கட்டுப்பாடான நிலைமை காணப்படுவதாகவும் தெரிகிறது.

ரயிலின் சாரதி மற்றும் ஊழியர்கள் பெருமளவு பயணிகள் சம்பவம் இடம்பெற்ற போது தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் பற்றிய விவரம் ஏதும் தெரியவரவில்லை என கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

தாக்குதல் நடத்திய கோஷ்டியினர் இப்பெட்டியை விட்டு அகல முன்னர் ரயில் என்ஜினுக்கும் இரு ரயில் பெட்டிகளுக்கும் தீவைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு .

கோடி ரூபா வரை பாதுகாப்பு வரியாக அறவிடப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை சிறிலங்கா அரசு கொண்டு நடத்துவதற்காகவே இவ்வரி அமுலாக்கப்பட்டது.

மது ஏற்றுமதிக்கல்லாத இறக்குமதிகள் யாவற்றிலும் சகல சேவைகளிலும் இந்த வரி விதிக்கப்படுகிறது

இழப்புகளை

தளத்துடன் சில சந்தர்ப்பங்களில் படையணிகள் சில முழுமையாகவே அழிக்கப்பட்டும் உள்ளன. கட்டுப்பாட்டு முகாம் அழிப்பு இவற்றில் ஒன்றாகும் இப்படியான இழப்புகளை ஈடுசெய்யும் முகமாகவே படை திரட்டும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகத் தெரிக்கப்படுகின்றது.

உலர் உணவு...

ஆரம்பிக்க வேண்டும் தீவக இராமசேவையாளர்களை தவிர வேறு எந்த இராம சேவையாளர்களும் தமக்கு பணிபுரிவதற்கு அனுமதி வழங்க உடனடியாக யாழ் செயலகத்தால் பரிசீலிக்கப்படும் தமது "இ" உணவு அட்டைகளை மீள உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த மறியல்போராட்டத்தினை நடத்தினார்கள் பின்னர் இங்கு ஒரு முடிவு கிடைத்ததை தொடர்ந்து மதியம் 12 மணியுடன் திரும்பி சென்றனர்.

இந்த இரண்டு மணிநேர மறியல் போராட்டத்தினால் செயலகத்தின் பல்வேறு பகு…

இலங்கை செஞ் சிலுவைச் சங்கம்,
யாழ்- கிளை தலைமையகம்

### விசேட பொதுக் கூட்டத்துக்கான அறிவித்தல்

யாழ் கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவதால், மேற்படி கிளையின் விசேட பொதுக்கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 23-08 92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு, யாழ் பரியோவான் கல்லூரி, யுபுலி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்கிளை செயற்குழு உறுப்பினர் பதவிக்கான நியமனங்கள் 10-08-92 முதல் 14-08-92 பிற்பகல் 4 00 மணிவரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும் (இதற்கான படிவங்களை எமது பணிமனையில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்

நியமனப் பத்திரங்களை 16-08-92 பிற்பகல் 4.00 மணிவரை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம்

11-07-92க்கு முன் அங்கத்துவ பணம் செலுத்தி உரிய பற்றுசீட்டு/அங்கத்துவ அட்டை பெற்றவர்கள் மட்டும் எதிர்வரும் கிளைத் தேர்தலில் பங்குபற்ற உரித்துடையவர் ஆவர்.

#### பிரிவு வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்கிளையின் ஒவ்வொரு பிரிவிலும் 09-08-92 ஆம் திகதி வருடாந்த பொதுக் கூட்டம் பின்னர் பகுதிகளில் அறிவிக்கப்படும் இடங்களில் நடைபெறும். இக் கூட்டங்களில் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும்,

அ. பிரிவுக்கான புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு 1992 / 1993

ஆ. கிளைப்பொதுக் கூட்டத்தில்பங்குபற்றும்30 இணைச்சபை பிரதிநிதிகளும்தெரிவு செய்யப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 30 இணைச்சபை பிரதிநிதிகளின் முழு பெயர், அங்கத்துவ அட்டை இலக்கம், தே. அ. அ இலக்கம், அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவு செய்யப்படும் புதிய தலைவரின் கையொப்பத்துடன் புதிய பிரிவு செயலாளர், யாழ் கிளை கௌரவ செயலாளருக்கு 10-08 92 பிற்பகல் 4 00 மணிக்கு முன்பாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்,

பிரிவுகளின் நியமனம் 26-07-92 முதல் 30-07-92

## தேசம் விடுதலை அடையும்போது 'நெருப்பு மழை' ஓயும்

"எப்போது இத்தகைய தேசர் வெளியீட்டு விழாவில் இத்திரைகள் எல்லாம் வெறுமையாக இருக்கின்றதோ அப்போது தான் தமிழீழம் விடுதலை அடைந்ததாக சொல்லப்படும் இவ்வாறு கவிஞர் மு.வே.யோ வாஞ்சிநாதன் தனது நெருப்பு மழை கவிதை தொகுதி வெளியீட்டு விழாவில் பதிலுரையில் குறிப்பிட்டார்.

எமது தேசம் விடுதலை பெற மக்களும் போராளிகளாகி எல்லையில் எதிரியுடன் போரிடவேண்டும் எமது தேசம் விடுதலை அடையும் போது தான் நெருப்புமழையும் ஓயும் என அவர் தமதுரையில் மேலும் தெரிவித்தார்.

யாழ் - இந்து கல்லூரியில் நேற்று மாலை நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் ஆய்வுரைகளை இ. முருகையன் காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையை புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் நிகழ்த்தினார் முதற் பிரதியை நிதர்சனம் பொறுப்பாளர் பரதன் பெற்றுக் கொண்டார்.

சிற்பி சரவணபவான், புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

இம்மாத இறுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் இந்த பிரதிநிதிகளுக்கு எடுத்து கூறினார்.

பொருட்களை மக்களுக்கு உடனடியாக வழங்கமுடியாத பட்சத்தில் யாழ் செயலக புனர்வாழ்வு பகுதி லொறிகள் மூலம் உணவுப் பொருள்களுடன் வந்து அவர்கள் பல நோ.கூ சங்கங்களுக்கு முன்னால் வைத்து மக்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றாக [?] யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 47

மறியல் போராட்டத்தினை நடத்தினார்கள் பின்னர் இங்கு ஒரு முடிவு கிடைத்ததை தொடர்ந்து மக்கள் 12 மணியுடன் திரும்பி சென்றனர்.

இந்த இரண்டு மணிநேர மறியல் போராட்டத்தினால் செயலகத்தின் பல்வேறு பகுதிகளும் செயலிழந்தன. ஊழியர்களை தவிர வேறு எவரும் செயலகத்தினுள் உட்செல்ல ஆர்ப்பாட்டக்காரர்கள் அனுமதிக்காததினால் செயலகத்தின் அத்தியாவசிய வேலைகள் நண்பகல் 12.00 மணிக்கு பின்பே வழமைக்கு திரும்பியதை அவதானிக்க முடிந்தது. 47 25

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் [?] கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 22-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

கிளைச்சபை பிரதிநிதிகளின் முழுப்பெயர், அங்கத்துவ அட்டை இலக்கம், தே.அ.அ இலக்கம், அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவு செய்யப்படும் புதிய தலைவரின் சிபார்சுடன் புதிய பிரிவு செயலாளர், யாழ் கிளை பொது செயலாளருக்கு 10-08-92 பிற்பகல் 4.00 மணிக்கு முன்பாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரிவுகளின் நியமனம் 26-07-92 முதல் 30-07-92 வரை பிரிவு பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும். (இதற்கான படிவங்களை ரூபா 10/- செலுத்தி பிரிவு பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்)

பிரிவு வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் ஒவ்வொரு பிரிவுகளால் கிளையின் பொது செயலாளருக்கு 25-07-92 பிற்பகல் 4.00 மணிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சி சிவானந்தராசா

73, கண்டி வீதி, பொது செயலாளர்
யாழ்ப்பாணம்
21-07-92 07055